20.08.2024 எம்.சி.ஓ.பி. எண். 186/2016 ம.சா.1 தமிழ்வாணி

குறுக்கு விசாரணை

விபத்து சென்னை-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் இருங்காட்டுகோட்டை அருகே நடந்தது. ஹோண்டாய் கம்பெனி கார் சிக்னர் அருகே விபத்து நடந்தது. நான் சிக்னலில் இருசக்கர வாகனத்தில் நின்றுகொண்டிருந்தேன். லாரி திரும்பியபோது விபத்து ஏற்பட்டது. லாரி ஓட்டுநர் சரியான திசையில் தான் சென்றார் என்றும், நான் தான் லாரியில் சென்று மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து தொடர்பாக என் கணவர் தான் புகார் கொடுத்தார். நான் மருத்துவமனையில் இருந்தேன். தவறான புகார் அளித்து 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மீது எந்த தவறும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றும், அதிக இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக கொடுங்காயங்கள் ஏற்பட்டதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.